3, 4 கட்டடங்கள் கட்டியதற்குப் பின்னர் மற்றவைகளுடைய செலவை அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. அந்த முறையில் முறைப்படி செலவை அரசு ஏற்றுக்கொள்ளும்.

Tuberculosis Sanatorium in Thanjavur.

*34 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Health be pleased to state the details of improvements effected at the Mahatma Gandhi Tuberculosis Sanatorium at Thanjavur during the calendar years 1971 and 1972?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஒரு இரத்த சேமிப்பு நிலையம் 1971-ல் தொடங்கப்பட்டது. 20 படுக்கைகள் கொண்ட அறுவை சிகிச்சைக்குப் பின்னர் சிகிச்சை பெறுகிற ஒரு பகுதியும் கட்டப்பட்டுள்ளது.

THIRU N. DENNIS: May I know the steps taken in other districts in this regard?

THE HON. THIRU K. ANBAZHAGAN: The question is mainly concerned with Mahatma Gandhi Tuberculosis Sanatorium at Thanjavur and the answer will be only relevant to that.

தாம்பரம் க்ஷய நோய் நலன்பேண் மருத்துவ மனை.

*35 வினா—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் க்ஷய நோய் மருத்துவ மனையில், நோயாளி களுக்குக் கொடுக்கப்படும் உணவு வகை என்னென்ன?

(இ) அதன் அளவினை மேலும் அதிகப்படுத்தும் செயற் குறிப்பு உண்டா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) விடை@ ஒன்று. அவையினுடைய மேஜையின் மீது வைக்கப்பட்டுள்ளது.

@ 390–391-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப் பட்டுள்ளது.